## 12

# சிலுவைக்குக் கூற்றுகள்

## மத்தேயு 27; மாற்கு 15; லூக்கா 23; யோவான் 19

*"மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" (மத்தேயு 27:42).*

சிலுவையில் இருந்து இயேசு கூறியவற்றை யார் மறக்கமுடியும், மற்றும் சிலுவைக்கு மக்கள் கூறியவற்றை யார் பாராட்டமுடியும்? நம்மை நாமே கவனித்துக் கேட்கும்போது, நாம் கேட்பவை குறித்து நாம் சங்கடம் அடைந்து, ஏமாற்றம் அடைந்து, மற்றும் பெருமூச்சு விடுகிறோம்.

இயேசு சிலுவையில் இருந்தபோது அவருக்கு என்ன கூறப்பட்டது?

*அறைகூவல்.* மக்கள், "நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா" என்று கூறினர் (மத்தேயு 27:39, 40). இயேசுவைத் துன்புறுத்தியவர்கள், "நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும்" என்று கூறினர் (மாற்கு 15:32). விசுவாசித்தல் என்பது அவர்கள் செய்திருக்கக்கூடிய எல்லாமுமாக இருப்பதில்லை. இயேசு சிலுவையிலிருந்து இறங்கி வந்திருந்தால், அவர்கள் திரும்பவும் அவரை அறைந்திருப்பர்! நிபந்தனைகளை விதிக்கும் மக்கள் விசுவாசிக்க முடியாது மற்றும் அவர்கள் விசுவாசிக்க மாட்டார்கள். முரட்டுத்தனமான பாவிகள் விசுவாசிக்க முடியாது. இயேசுவின் வல்லமையினால் லாசரு உயிர்ப்பிக்கப்பட்டிருந்ததை எவரொருவரும் மறுக்க இயலாதிருந்தது (யோவான் 11). இருப்பினும், இந்த உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் மரணத்தை விரைவுபடுத்திற்று. நாம் விசுவாசிக்க விரும்பாதபோது, அற்புதங்கள்கூட நமக்கு உதவ முடியாது!

*மாயாஜாலம்.* கிறிஸ்துவுடன்கூடச் சிலுவையில் அறையப்பட்டிருந்த மனிதர்களில் ஒருவர், "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்" என்று கூறினார் (லூக்கா 23:39). "ஒரு தந்திரத்தைக் கொண்டு எங்களைத் திகைக்க வை" என்று அவன் கூறினான். இயேசு ஒரு மந்திரவாதி அல்ல. தேவனைப்போன்று எவரொருவரும் உணர்வற்றவராக இராதிருப்பதில் ஒரு கருத்து உண்டு. மனிதர்கள் உணர்வெழுச்சிக்காக

ஏங்குகின்றனர். சிலுவையின் அருகில் இருந்தவர்கள்கூட கவனித்து, கேட்டு, மற்றும் கற்றுக்கொள்ள இயலாதிருந்தது. அவர்கள் ஏதேனும் ஒன்றை நடக்கச்செய்ய முயற்சித்தனர். அவர்கள் கூறிய மற்றும் செய்த ஒவ்வொன்றும் தோல்வியுற்றது. இன்றைய நாட்களில் மக்கள் உணர் வெழுச்சியை பரப்புகின்றனர். அவர்கள் "பரிசுத்த மெய்சிலிர்ப்புகளை" விரும்புகின்றனர். அவர்கள் தங்கள் கண்களைக் கொண்டு கேள்வியுற்று தங்கள் உணர்வுகளைக் கொண்டு நினைக்கின்றனர். மனம்வருந்தாத கள்வன் தேவதூஷணம் என்பது உட்பட, பல குற்றங்களினால் குற்றப்பட் டிருந்தான் (லூக்கா 23:39). அவன் கர்த்தரை அழைத்து அவரிடத்தில் இரட்சிப்புக்காக ஏளனமாகக் கேட்டான். மரித்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் எவ்வாறு இவ்வளவு மனக்கடினமாக இருக்க முடியும்?

மனிதன் தனக்குத்தானே மிகவும் மோசமான விரோதியாக இருக் கிறான். இயேசு தம்மைத்தாமே இரட்சித்துக் கொண்டிருந்தால் என்னவாகி யிருக்கும்? பின்பு மனிதர் அழிந்து போயிருப்பார்கள். நம்மை இரட்சிப்பதற் காக இயேசு சிலுவையில் தங்கியிருந்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத் தார்.

*மாற்றம்.* ஒரு கள்வன் மனம் வருந்தாதிருந்தான், ஆனால் இன்னொருவன், "அடியேனை நினைத்தருளும்" என்றான் (லூக்கா 23:42). சிலுவையானது மனிதர் களை உன்னதமாக்குகிறது அல்லது மிகவும் மோசமானவர்களாக்குகிறது. ஒரு கள்வனுடைய சுயநலமான வாழ்வு அவனது சுயநலமான மரணத்தில் முடிந்தது. இன்னொரு கள்வன் மனந்திரும்பினான். அவன் சூழ்நிலைகளினூடாகத் தன்னை முன் தள்ளிக்கொண்டு இயேசுவின்மீது கவனம் குவித்து இரக்கத்தைக் கேட்டான். இந்தக் கள்வன், என்ன நடந்துகொண்டிருந்தது என்பதைப் பூமியின்மீது புரிந்துகொண்டிருந்த ஒரு மனிதனாக இருந்தான். அவன் தான் ஒரு துன்மார்க்கமான வாழ்வை வாழ்ந்துகொண்டிருந்ததை உணர்ந்தறிந்து மாற்றத்திற்கான தேவையைக் கண்டான். சுவிசேஷத்தின் செய்தியானது "நற்செய்தி"யாவதற்கு முன்பு அது "மோசமான செய்தி"யாக வேண்டும்.

*வெறித்துப் பார்த்தவர்கள்.* மற்றவர்கள், "எலியா இவனை இரட்சிக்க வருவானோ, பார்ப்போம்" என்று கூறினர் (மத்தேயு 27:47-49; மாற்கு 15:36ஐக் காணவும்). வெறித்துப் பார்ப்பவர்கள் அபாயகரமானவர்களாக உள்ளனர். இயேசு தேவனிடத்தில் உரக்கக் கதறியபின்பு, அங்கு நின்றவர்கள் அருகில் நிற்பவர்கள் செய்வதை - அவர்கள் எல்லாவற்றையும் போட்டுக் கலக்கிக் குழப்புவதை - செய்தனர்! இயேசுவின் இருதய ஆழத்தில் இருந்து ஒரு கதறலைக் கேட்டபின்பு, மூடநம்பிக்கையுள்ள மனிதர்கள் எலியாவை தேவனுடன் குழப்பிக் கொண்டனர். அருகில் நிற்பவர்கள் (திகிலானவை நடப்பதை நாடுபவர்கள்) ஒவ்வொன்றையும் காணுகின்றனர், ஆனால் ஒன்றையும் உற்றுக்கவனிப்பதில்லை. அவர்கள் நடக்கிற எல்லாவற்றையும் காணுகின்றனர், ஆனால் சிறிதளவே புரிந்துகொள்கின்றனர். அங்கு அருகில் நின்றவர்கள் இயேசுவுக்குக் காடியைக் கொடுத்தல் என்பதை மாத்திரமே செய்தனர்! என்ன ஒரு தரக்குறைவான பரிகாசம்!

*சூதாடுபவர்கள்.* படைவீரர்கள் இயேசுவின் மேலங்கியைக் குறித்து, "இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப்

போடுவோம்" என்றனர் (யோவான் 19:24). இயேசு நமது பாவங்களுக்காக மரித்துக் கொண்டிருக்கையில் மனிதர்கள் அவரது உடைகளைக் குறித்துச் சீட்டுப் போட்டுக்கொண்டிருந்தனர். கடின இருதயம் கொண்ட ஒருவன் மாத்திரமே சிலுவையினருகில் சூதாட முடியும்.

நாம் யாவருமே நமது வாழ்வை ஏதோ சிலவற்றிற்காக விற்கிறோம். ஒரு மனிதர் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தியும் தமது ஆத்துமாவை இழந்துபோகக்கூடும் (மத்தேயு 16:24-26). மனிதர்களை இரட்சிப்பதற்காகத் தேவனுடைய குமாரன் மரித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் சூதாடிக் கொண்டிருந்தனர்! மனிதர்கள் ஒரு மனிதருடைய உயிரைக் காட்டிலும் ஒரு உடையின் மதிப்பில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். மக்களைக் காட்டிலும் பொருட்கள் அதிக முக்கியமானவைகளாக இருந்தன. நாம் எவ்வகையிலாவது வேறுபடுகிறோமா? நாம் எவ்வகையிலாவது [இவர்களைவிட] மேன்மையானவர்களாக இருக்கிறோமா? நாம் ஒவ்வொரு விஷயத்தின் விலையையும் அறிகிறோம் மற்றும் எந்த ஒரு விஷயத்தின் மதிப்பையும் அறிவதில்லை. இயேசு பரலோகத்திற்குத் திரும்ப சென்றார்; உடையானது விரைவிலேயே மறைந்து போயிற்று. ஆவிக்குரிய மதிப்பீடுகள் என்றென்றைக்கும் உள்ளன; உலகப்பிரகாரமான விஷயங்கள் மறைந்து போகின்றன.

*முடிவு வேளை.* நடந்துகொண்டிருந்தவை என்ன என்பதை உற்றுக் கவனித்திருந்த ஒரு நூற்றுக்கதிபதி, "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" என்று கூறினார் (மாற்கு 15:39). இது யுத்தத்தினால் கடினப்பட்டுப் போயிருந்த படைவீரருக்கு இன்னுமொரு வேலை நாளாக மாத்திரமே இருந்தது, ஆனால் ஒருவேளை அவர் தமது வேலையைச் செய்வதில் பெருமிதம் அடைந்து அதை நன்கு செய்திருக்கலாம். அவர் ஒவ்வொரு அசைவையும் கவனித்தார், அவர் ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்துக் கேட்டார். இயேசு மாறுபட்டவராக இருந்தார்; இந்தச் சிலுவை மாறுபட்டதாயிருந்தது. நேர்மையான இந்த மனிதர் தம்மை அறியாமலேயே தம்மை அழியாதவராக்கிக் கொண்டார். இந்த உலகமும் கும்பல்களும் மற்றும் விரோதிகளும் முற்றிலுமாகத் தவறவிட்டிருந்ததை இந்த மனிதர் கண்டார்! ஒருவர் நேர்மையாக மேற்கொள்ளக்கூடிய ஒரே முடிவைத்தான் இந்த மனிதர் மேற்கொண்டார். இயேசு தேவனுடைய குமாரனாக இருக்க வேண்டும் அல்லது அவர் அவ்வாறு இல்லாதிருக்க வேண்டும்! இந்த நூற்றுக்கதிபதி தமது முடிவை ஏற்படுத்தினார்; நாம் நமது முடிவை ஏற்படுத்தியாக வேண்டும்!

நாம் யாவரும் நம்மைச் சிலுவையின் அருகில் கண்டறிகிறோம். அங்கு நாம் கண்ட பலதரப்பட்ட குழுக்கள் தாம் என்ன: விரோதிகள், துடுக்கான ஆர்வம் கொண்டவர்கள், அறியாதவர்கள், காட்சி காண வந்தவர்கள், அச்சமடைந்த சீஷர்கள், மற்றும் அன்பானவர்கள்! இயேசு ஒருவர் மாத்திரமே தேவனின் சித்தத்தை முழுமையாக வாழ்ந்து முடித்தவராக இருந்தார்.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*